T-UN-667

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

மலர் 3 | திருவள்ளுவராண்டு 2015 — ஆவணி 30 | 14—9—1984 | இதழ் 6

இராசராசனும் இலங்கையும்

இராசராசனின் மெய்க்கீர்த்தி, சிங்களரை 'முரட்டொழில் சிங்களர்' என்று கூறும். அந்நாட்டு மன்னன் ஐந்தாம் மகிந்தன் சோழப்படையினரால் கொல்லப்பட்டான். இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்று பெயரிடப்பட்டது. இலங்கையின் தலைநகர் அனுராதபுரம் அழிக்கப்பட்டது. இலங்கையின் நடுநாயகமாக விளங்கிய பொலனருவா இராசராசன் பெயரால் 'சனநாதமங்கலம்' என்று பெயரிடப்பட்டுத் தலைநகராக்கப்பட்டது. மாதோட்ட நகரில் 'இராசராசேச்சுரம்' என்ற சிவன் கோயிலும், சனநாத மங்கலத்தில் 'வானவன் மாதேவி ஈச்சுரம்' என்ற சிவன் கோயிலும் அமைக்கப்பட்டன.

வென்ற பகுதிகள் கணக்கன் கொட்டியாரமான விக்கிரம சோழ வளநாடு, மாப்பிசும்புக் கொட்டியாரமான இராசராச வளநாடு எனப் பெயரிடப் பெற்றன. செப்பேடுகள், வானரப்படையின் உதவியுடன் இலங்கையை வென்ற இராமனது வெற்றியை விட, இராசராசன் பெற்ற வெற்றியைப் பாராட்டுகின்றன. சோழ நாட்டு அறமுறை, ஆட்சிமுறை இலங்கையில் பின்பற்றப்பட்டன. இராசராசனுக்குப் பின் 'சோழ இலங்கேசுவரன்' என்ற சிறப்புப் பெயருடன் சோழர்குல இளவரசர்கள் இலங்கையை ஆட்சி புரிந்தனர்.

இராசராசனின் சீனத் தூதுக்குழு

சீன நாட்டிற்கு முதன்முதல் தூதர்களை அனுப்பியவன் இராசராசன். 'சுங் அரச மரபின் வரலாறு' என்னும் நூல் இராசராசனை 'லோச்சா லோச்சா' என்று கூறுகிறது.

இராசராசனின் சீனத் தூதுக்குழுத் தலைவன் பெயர் 'சோழ சமுத்திரன்'. இவன் சோழ நாட்டின் ஒரு துணை அமைச்சனாவான்.

'சோழ சமுத்திரன்' ஒரு தாம்பாளத் தட்டினை ஏந்தினான். அத்தட்டில் முத்துக்கள், இரத்தினக் கற்கள், நறுமணப் பொருட்கள் இருந்தன. தன்னுடைய பரிவாரத்தோடு முன்னோக்கிச் சென்று சீனப் பேரரசனுடைய திருவடிகளில் வைத்துவிட்டு அப்படியே சில அடிகள் பின்னோக்கிச் சென்று தலைதாழ்த்திக் கைகூப்பித் தன்னுடைய வணக்கத்தைத் தெரிவித்தான். நெடுந்தொலைவில் உள்ள சோழ நாட்டைச் சேர்ந்த மக்களின் அன்புக் காணிக்கை இது என்று கூறினான். இராசராசன் கொடுத்தனுப்பிய முடங்கலையும் கொடுத்தான்.

சோழர் வரலாற்றில் மூன்று குந்தவைகள்

குந்தவை (குந்த—அவ்வை) என்றால், 'வணக்கத்திற்குரிய அம்மை' அல்லது 'திருமகள்' என்று பொருள்படும். குந்தவை பெயரில் சோழர் வரலாற்றில் மூன்று குந்தவையரைக் காண்கிறோம்.

1) அரிஞ்சய சோழனின் மூத்த மனைவி, வீமன் குந்தவை. அவர் கீழைச் சளுக்கிய மன்னன் இரண்டாம் வீமனின் மகளார்.

2) இராசராசனின் தமக்கையார், ஆழ்வார் பராந்தகன் குந்தவைப் பிராட்டியார். இவர் கீழைச் சளுக்கிய மரபினரான வல்லவரையன் வந்தியத்தேவரை மணந்தார்.

3) இராசராசனின் இளைய மகளார் குந்தவை, கீழைச் சளுக்கிய மன்னன் விமலாதித்தனை மணந்தார்.

- செ. இராசு
கல்வெட்டியல் துறை

பெரிய கோயிலைக் கட்டிய சிற்பியர்

கண்டோர் வியக்கும் கவின்மிகு தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தலைமைச் சிற்பி 'வீர சோழன் குஞ்சர மல்லனான இராசராசப் பெருந்தச்சன்'. அவனுடைய உதவியாளர்கள் நித்த விநோதப் பெருந்தச்சன், கண்டராதித்தப் பெருந்தச்சன் ஆவர்.

மணமுள்ள திருமஞ்சன நீர்

தஞ்சைப் பெரிய கோயிலில் பெருவுடையார்க்கு இராசராசன் காலத்தில் நாள்தோறும் மூன்று முறை திருமஞ்சன நீராட்டப்பட்டது.

அந்நீரில் பெருஞ்சண்பக மொட்டு, ஏலஅரிசி, எலுமிச்சை இவைகளை ஊறவைத்து மணம் ஊட்டி நீராட்டினர்.

மாமன்னன் இராசராசன் கருவூர்த் தேவருடன். தஞ்சாவூர், பெருவுடையார் கோவிலில் உள்ள கற்சிற்பம்.

தமிழ் மண்ணில் பூத்த கருத்து

'இந்திய நாட்டின் தாவரவியல் வரலாறு' என்னும் நூலில், அதன் ஒரு பகுதிக்கு ஆசிரியரான திரு ஏ.கே.கோச், பின்வரும் ஒரு வியத்தகு உண்மையினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகில் உள்ள தாவரங்களுக்கெல்லாம் இரட்டைப்பெயர் சூட்டும் முறையை (பேரினப் பெயரும் சிற்றினப்பெயரும் கூடியது) இலின்னேயசு (Linnaeus) —) என்பவர்தான் முதலில் வகுத்தார் என்று, இந்நாளில் உலகமெல்லாம் ஒப்புக் கொண்டுள்ளது. இவ்விரட்டைப்பெயர் வைப்புமுறை மனிதனுடைய அறிவியலாற்றலினால் கண்டுபிடிக்கப் பட்டதொன்று என்றுங் கூறுவர்.

இம்முறையை முதன்முதலில் தாமாகவே கையாண்டவர் இலின்னேயசு அல்லர். அவர்தம் மாணவரும், கிறித்துவத் திருச்சபையைச் சார்ந்த வருமான சான் எரால்டு கோயனிக் என்னும் பாதிரியாரே ஆவர். இவர் அந்நாளில் தரங்கம் பாடிக்குப் பாதிரியாராக அனுப்பப்பட்டவர். இவர் தாமாகவே தரங்கம்பாடியிலும் பிறவிடங்களிலும் தொகுத்த தாவரங்களுக்கு, முதன்முதலாக அவற்றின் பயன்களின் அடிப்படையில் இலத்தீன் மொழியில் இந்த இரட்டைப்பெயரை வைத்து இலின்னேயசுக்கு அனுப்பினார். அவர் இவ்விரட்டைப்பெயர் முறையைத் தம்முடையதாகவே வெளியிட்டுவிட்டார். ஆதலின், தாவரங்களுக்கு இந்நாளில் வழங்கப்படும் இலத்தீன் இரட்டைப்பெயர் முறை, முதன் முதலாகத் தஞ்சைத் தமிழ் மண்ணில் கி.பி.1768ஆம் ஆண்டில் பூத்தது.

—கு.சீனிவாசன்,
அறிவியல் துறை.

திருக்குளம் கிணறு ஆயிற்று

சைவக் கோயில்களில் திருக்குளம் ஒன்று ஆகம முறைப்படி அமைக்கப்படுவது மரபு. தஞ்சைப் பெரிய கோயிலில் நடராசர் மண்டபத்திற்கு அருகில் 'தேரைத் தீர்த்தம்' என்றொரு குளம் இருந்தது. சரபோசி மன்னர் அதை மூடி, ஒரு கிணறாக மாற்றினார்.

(Ins.419 of 1924)

—து.பத்மநாபன்,
தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்

நஞ்சு போக்கும் அவுரி

அவுரி சிறந்த மூலிகை. அதன் இலையும் வேரும் நஞ்சைப் போக்கும் தன்மை கொண்டவை. நஞ்சில் 18 வகைகள் உள்ளன. 'சந்நி' என்னும் பனிக் கரய்ச்சலில் 13 வகைகள் உள்ளன.

அவுரி இலைகொண்டு பக்குவப்படுத்தப்படும் பாக மருந்துகளால் இவை தீரும். பின்வரும் வெண்பா இதனைக் குறிக்கின்றது:

சந்நி பதிமூன்றும் சந்தொடிந்த வாதமுதல்
உண்ணு விடக்கடியும் ஓடுங்காண்—மின்னுங்
கவுரிநிறம் உண்டாகும் காசினியுள் நல்ல
அவுரிஇலை தன்னால் அறி —அகத்தியர் குணபாடம்

—சே.பிரேமா
சித்த மருத்துவத் துறை

வரலாற்றுக் கருத்தரங்கு

இராசராசன் முடிசூடிய 1000 ஆண்டு விழாவை ஒட்டிய சோழர் வரலாற்றுக் கருத்தரங்கு ஒன்று தமிழ்நாடு அரசின் உதவியுடன் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் செப்டம்பர் 18, 19 ஆகிய நாள்களில் நடைபெற உள்ளது. மைய, மாநிலத் தொல்பொருள்துறை உயர் அலுவலர்கள், பல்வேறு பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், ஆய்வு நிறுவனங் களின் ஏறத்தாழ 140 ஆய்வாளர்கள் பங்கு கொண்டு ஆய்வுரை அளிக்க உள்ளனர். ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் சோழர் வரலாற்றோடு தொடர்புடையன.

—கல்வெட்டியல் துறை

எந்தத் தஞ்சாவூர்?

தஞ்சாவூர் என்றதும் இராசராசனின் தலை நகரைத்தான் எல்லோரும் முதலில் நினைப்பர்.

ஆனால், பெரியபுராணத்தில் தஞ்சாவூர் என்பது இராசராசனின் தலைநகரைக் குறிக்கவில்லை.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான செருத்துணையார் பிறந்த ஊர் இது. சோழ நாட்டிலே ஒரு பகுதியாக அமைந்த மருகல் நாட்டைச் சார்ந்தது. இவ்வூர் அகத்திலும் புறத்திலும் குல ஒழுக்கத்திலும் தவறாத பழங்குடிகள் வாழ்ந்த செல்வமிக்க ஊராகும் எனச் சேக்கிழார் குறிப்பர்.

உள்ளும் புறம்புங் குலமரபின்
ஒழுக்கம் வழுவா ஒருமைநெறி
கொள்ளும் இயல்பிற் குடிமுதலோர்
மலிந்த செல்வக் குலப்பதியாம்
தெள்ளுந் திரைகள் மதகுதொறுஞ்
சேலுங் கயலுஞ் செழுமணியும்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு
மருக நாட்டுத் தஞ்சாவூர்

பெரியபுராணம்—4120
(செருத்துணை நாயனார் புராணம்)

இவ்வூரினை இப்போது கீழைத் தஞ்சாவூர் என அழைப்பர்.

—தா.வே.வீராசாமி,
தொகுப்பியல் துறை

கணிப்பொறி—சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு

தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பு மையம், செப்டம்பர் திங்கள் 28—ஆம் நாள் தொடங்கி நவம்பர் திங்கள் 12—ஆம் நாள் வரை 'கணிப்பொறி ஒருங்கும் கோபால் மொழியும்' என்ற முழுநேரச் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பினை நடத்த உள்ளது. இப் பயிற்சி வகுப்பு 80 மணி நேரம் கருத்துரை வகுப்பையும், 40 மணி நேரம் கணிப் பொறியில் நேரடிச் செயல்முறை வகுப்பை யும் பெற்றமையும்.

—கணிப்பு மையம்

ஊமன்

பனங்கொட்டை முளைத்துக் குருத்து வந்ததும், அஃது உள்ளீடில்லாத குடுக்கையாகும். அதனை யாழ்ப் பாணத்தில் ''ஊமல்'' — ''ஊமன்'' என்கின்றனர். ஊமன் எனப்படுவதன் கரணியத்தை நோக்கினால், இலக்கிய நயத்தோடு கூடிய கருத்து கிடைக்கிறது.

பனங்கொட்டை காய்ந்ததும் உள் இளநீர் வற்றிப் பருப்பு காய்ந்து கொப்பரையாகும். அந்நிலையில் கொட்டையை ஆட்டினால் கொப்பரை உள்ளே உருண்டு ஒலிக்கும். முளைத்ததும் கூடான குடுக்கை ஒலிப்பதில்லை. ஒலிப்பதைப் பேசுவதாகக் கொண்டனர். ஒலிப்பது பேச்சென்றால் ஒலி இல்லாதது ஊமைதானே!

ஊமை என்பதன் இலக்கியச் சொல் ''ஊமன்''.

''கண் இல் ஊமன் கடற்பட்டாங்கு'' (புறம்:238:16)
''கை இல் ஊமன் கண்ணிற் காக்கும்''(குறுந்:58:4)
''உயர்திணை ஊமன் போல'' (குறுந்:224:5)

மாந்தன், 'உயர்திணை ஊமன்'. ஒலிக்காத கொட்டை, 'அஃறிணை ஊமன்' ஆகியது.

'அஃறிணை ஊமன்' என்பது கோட்டானைக் குறிக்கும். பனங்கொட்டை 'கொடு கொடு' என்று ஒலிக்கும் நிலையில் இப்பொருளில் கூறுவதும் பொருந்தும்.

—கோவை. இளஞ்சேரன்

பதிப்புத் துறை

கொத்தடிமை

குடும்பத்தோடு அடிமையாவதைக் கொத்தடிமை என்னுஞ் சொல் குறிக்கின்றது. இச்சொல்லை முதன் முதலில் பாடலில் அமைத்தவர் தாயுமான அடிகளார்.

'சித்தந் தெளிந்து சிவமானோர்
எல்லார்க்குங்
'கொத்தடிமை' யான 'குடி' நான்
பராபரமே'

என்பது அவர்தம் பராபரக் கண்ணி (148).

குடும்பத்தோடு அடிமையாவது என்னுங் கருத்தைக் ''குடி'' என்னுஞ்சொல் குறித்து நிற்பது நோக்கத்தக்கது.

கழுத்தில் அணியும் குட்டிப்புத்தகம்

'கடவுளின் பிரார்த்தனை' என்னும் உரைத் தொடர்கள் அடங்கிய மிகச் சிறந்த வழிபாட்டுப் புத்தகம் வெளியிடப்பட்டு உள்ளது. இப்புத்தகம் 25 காசு நாணய அளவில் உள்ளது. அந்த அளவில் உள்ள ஒரு சிறிய பிளாஃஸ்டிக் உறையில் புத்தகம் உள்ளது. புத்தகத்தைப் படிக்கச் சிறிய உருப்பெருக்கு ஆடியும் அவ்வுறையில் உள்ளது. சாவி வளையத்தில் அல்லது கழுத்துச் சங்கிலியில் இந்தக் குட்டிப் புத்தகத்தை அதன் உறையுடன் அணிகலன் போன்று இணைத்துக் கொள்ள முடியும். அந்த அளவுக்கு அந்த உறை கவர்ச்சியாக உள்ளது. அமெரிக்க வெளியீட்டு நிறுவனம் ஒன்று இப்புத்தகத்தை 1973—இல் வெளியிட்டுள்ளது.

—இரா. மோகனசுந்தரம்,

மலையின மக்கள் ஆய்வு மையம், உதகமண்டலம்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ச்சொற்கோவை

தமிழ்ச் சொற்களை மட்டுமே கொண்டு அகர முதலி செய்ய முடியுமா; வேண்டுமா?—என்ற ஆய்வுகளில் முழ்கி இருக்கும் இவ்வேளையில் தமிழ்ச் சொற்களை மட்டும் கொண்ட நிகண்டு நூல் ஒன்று அண்மையில் (இவ்வாண்டு) வந்துள்ளது. நூலின் பெயர்: 'தமிழ் உரிச்சொற் – பனுவல்' இந்நூலின் ஆசிரியர், கவிராச பண்டித இராம.சுப்பிரமணிய நாவலர் (மான் முருக நாவலர்) ஆவார்.

இந்நூல் நூற்பா வடிவில் அமைந்த 7532 நூற்பாக்களைக் கொண்டதாகும்.

இந்நூலின் இறுதியில் முதல் ஒன்பது தொகுதிகளின் பொருளடக்கம் தந்திருப்பதும், பத்தாவது தொகுதி அகர வரிசையிலேயே அமைந்திருப்பதும் இந்நிகண்டின் தனிச்சிறப்பாகும்.

நிகண்டு எனும் வடமொழிச் சொல்லையும் கையாளாமல் 'உரிச்சொற் பனுவல்' எனும் தூய தமிழ்ப் பெயரால் நூலைக் குறிப்பிடுவது போன்றே நூலுள் வரும் சொற்களின் பொருள்களும் தூய தமிழ்ச் சொற்களாலேயே குறிக்கப்பட்டுள்ளன.

—த.கோ.பரமசிவம்,

ஓலைச்சுவடித் துறை

உடல் வன்மையும் உரை வன்மையும் தரும் சம்பா

சம்பா நெல், ஊட்ட உணவிற்குரியது. அதில் 29 வகைகள் உள்ளன. அவ்வகைகள் மணி பிடித்து அமையும் வடிவத்திற்கு ஏற்பவும், தன்மை, தரும் நன்மைகளுக்கேற்பவும் நம் முன்னோரால் அவற்றிற்குப் பெயர்கள் இடப்பட்டன.

வடிவமைப்பிற்குப் பொருத்தமான உவமப் பொருள் கொண்டு இடப்பட்ட பெயர்கள்:

சீரகச் சம்பா	ஈர்க்குச் சம்பா
மிளகுச் சம்பா	கோரைச் சம்பா
குன்றிமணிச் சம்பா	காடைச் சம்பா
மணிச் சம்பா	வளைதடிச் சம்பா
இலுப்பைப்பூச் சம்பா	குண்டுச் சம்பா
மணக்கத்தைச் சம்பா	வாலான் சம்பா
கல்லுண்டைச் சம்பா	

ஒவ்வொரு வகையும் தனித்தனிச் சுவையுடன் மருந்துத் தன்மையும் கொண்டது.

கல்லுண்டைச் சம்பா அரிசி உணவை உண்பவர், மற்போர் வீரரையும் எதிர்க்கும் உடல் வன்மை பெறுவர்; அத்துடன் வில்லில் வைத்த உருண்டை பாய்வதுபோன்ற உரை வன்மையும் பெறுவர். இதனை அறிவிக்கும் வெண்பா:

கல்லுண்டைச் சம்பாவைக் கண்டருந்தி நின்றவர்முன்
மல்லுண்ட பேரெதிர்க்க வாய்க்குமோ?—வில்லுண்டை
போலுரையாம் நல்ல புசபலமாம் இன்சுவையாம்
பாலனைய மென்மொழியே பார்.

—அகத்தியர் குணபாடம்

வேல். சம்பந்தமூர்த்தி

பதிப்புத்துறை

பல்கலைக் கழகச்
செய்தி மலர்
திங்களிதழ்
பதிவு எண் 15033/82X1

இ.அ.அ. மட்டும்.

புலவர் திலகம்
1709, பிச்சாண்டி முதலி சந்து
...னாசியப்பா வீதி
தஞ்சாவூர்

பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா.

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளாரின் மருகரும், சென்னையில் தமிழாசிரியராக 30 ஆண்டுகள் பணியாற்றியவரும் தருமையாதீனத் தமிழ்ப் புலவரும் ஆகிய புகழுடம்பில் நிற்கும் வை.குஞ்சிதபாதம் அவர்கள் தம் வாழ்நாளில் திரட்டிப் படித்துப் பயன்படுத்திய, அறுநூறு நூல்களை, அவர்தம் மனைவியார் திருவாட்டி கு. திரிபுரசுந்தரி அம்மையாரும் மக்களும் மனமுவந்து தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்திற்கு அன்பளிப்பாகத் தந்துள்ளனர். இவற்றுள் பல அரிய சைவசித்தாந்த நூல்களும், தமிழ்த் திங்கள் இதழ்களான செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம், ஞானசம்பந்தம் ஆகியவற்றின் பின் தொகுப்புகளும் அடங்கும். புலவர் குஞ்சிதபாதம் குடும்பத்தினருக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நன்றி தெரிவிக்கின்றது.

—து.பத்மநாபன்,
தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்

சுவடிகள் அன்பளிப்பு

ஓலைச்சுவடித்துறையின் சுவடி நூலகத்திற்குக் கீழ்க் காணப்படும் பெருமக்கள் அண்மையில் சுவடிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். பிறைக்குறிகள் உள்ள எண்கள் அவர்களால் வழங்கப்பட்ட சுவடிகளின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

திரு மெய்யப்ப சுவாமிகள், மேல்பாதி (2)
டாக்டர் ஏ.சிவகாமசுந்தரி எம்.ஏ.,பிஎச்டி., கோவை (1)
திரு ஏ.சோசப், கீழவாசல், தஞ்சை (1)
திரு ப.திருநாவுக்கரசு, மேலக்காவேரி (2)
திரு கொடுமுடி சண்முகம், எம்.இ., களஞ்சிய மையம், த.ப.க. (1)
திரு எம். தெய்வசிகாமணி, ஈரோடு (3)
திரு டி.அருணாசலம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், (2)
அருள்திரு வாலையானந்தர் திருமடம், திருப்பூந்துருத்தி (70)
திரு அப்துல் குத்தூசு, துவரங்குறிச்சி (1)

அன்பளிப்பாளர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நன்றி.

— மு.சண்முகம்பிள்ளை,
ஓலைச் சுவடித்துறை

தமிழ்க்கலை

தமிழியல் காலாண்டு ஆய்விதழ்

தமிழ் 1. கலை 4 — திசம்பர் 1983

பொருளடக்கம்

கட்டுரை
தொல்காப்பியமும் மேலை நாட்டுக் கவிதையியலும் ... 1
— ப. மருதநாயகம்
பொருளியலும் ஒரு புதிய சமுதாய அமைப்பும் ... 15
— கே இராசஇரத்தினம்
— தமிழாக்கம்: நேன்சி டேவிட்
பாட்டியல் கூறும் கணப்பொருத்தம் பைந்தமிழுக்குப் பொருந்துமா? ... 25
— அடிகளாசிரியன்
தாவரவியல்: வரலாறு காணாத காலம் ... 29
— கே ஏ சௌதுரி
— ஏ கே. கோச்
— எஃச் என். சென்
— தமிழாக்கம்: கு. சீனிவாசன்
கருத்துக்கோவை
பண்டை இந்தியாவில் கால அளவுகளும் அண்டகால இயலும் ... 59
— ஆ. சுப்பிரமணியன்
''யுக்திகல்பதரு'' ... 63
— மேதகு. போசராசன்
— தமிழ் மொழிபெயர்ப்பு: திரு சு. சுவாமிநாத சாத்திரிகள்
சிந்து இலக்கியம்—ஓர் ஆய்வு: தடைவிடைகள் ... 75
— இரா. செயராமன்
— பழ. முத்தப்பன்
யாழ்ப்பாணக் கரையோரப் பரதவர் தொழிற்கலைச் சொற்கள் ஓர் அறிமுகம் ... 87
— சண்முக. முருகானந்தம்
கலைக்களஞ்சிய மைய நிறுவனம் ஒன்று தொடங்குவதற்கான திட்டக் குறிப்பு ... 105
— தமிழாக்கம்: டாக்டர் இராம. சுந்தரம்.

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

★ **நீலகேசி**
பேரா ஆ.சக்கரவர்த்தி நயினார்
ஆங்கில, ஆய்வு முன்னுரையுடன்
நிழற்படப்பதிப்பு — உரூ. 140/—

★ **சட்ட இயல்**
(Jurisprudence)

பேரா மா.சண்முகசுப்பிரமணியம்
நூலகப்பதிப்பு — உரூ. 92/—
மாணவர் பதிப்பு — உரூ. 36/—

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத் துறை.
அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் — 613001.